நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 116 /2025

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேமலை |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்பண்ணகவுண்டர் |
| கிராமம் | : | ஏரிக்காடு, கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 69 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 19–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**2, 3, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ( இதற்கு முன்னால் பொதுவாக அனைத்து எதிரிகள் சார்பாகவும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. தற்போது 1,4,5 எதிரிகள் தரப்பில் தனியாக வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.)**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.40 AM

1. நான் கடந்த 28.07.2025 ம் தேதி நடைபெற்ற விசாரணையில் எனது

சகலையுடன் மூன்று நபர்கள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரில் இருந்தார்கள் என்றும் அவர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும் என்றும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜரில் இருக்கும் 1 வது எதிரி ஆனந்தன், 4 வது எதிரி சிவகுரு, 5 வது எதிரி அப்சர் ஆகிய மூவரும்தான் மேற்படி கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரில் இருந்த நான் சொன்ன 3 நபர்கள் ஆவார்கள்.

2. என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் படித்து பார்க்கவில்லை. என்னுடன் மாரிமுத்து, குமார் மற்றும் ஒருவர் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்தனர். ( **நீதிமன்ற கேள்வி– நீங்கள் மேற்சொன்னவாறு கையொப்பம் செய்த ஆவணம் தற்போது உங்களிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகசர் ஆவணமா என்றால்? ஆம். இந்த வழக்கு சம்மந்தமாக என்னிடம் காட்டப்படும் ஒரு கையெழுத்து தான் நான் போட்டேன். )**
3. என்னிடம் காட்டப்பட்ட அ.சா.ஆ.2 பார்வை மகசர் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி கையெழுத்தை காவல் நிலையம் வந்துவிட்டு மீண்டும் சம்பவயிடத்திற்கு செல்லும்போது சம்பவயிடத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன்.
4. நான் சம்பவயிடத்திற்கு போகும்போது உதவி ஆய்வாளர் என்னுடன் வந்தார். அவருடைய பெயர் தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு போகும்போது இரவு 9.00 மணியிருக்கும். நாங்கள் சம்பவயிடத்திற்கு போகும்போது குமார், மாரிமுத்து, முத்துசாமி மற்றும் என்னுடன் சேர்த்து போலீசாரை தவிர 4 பேர் மட்டுமே சம்பவயிடத்தில் இருந்தோம்.
5. உதவி ஆய்வாளர்தான் என்னுடன் மேற்படி 3 நபர்களை அழைத்துக்கொண்டு சம்பவயிடத்திற்கு சென்றார் என்றால் சரியல்ல. அங்கு போனப்பிறகு போன் செய்து என்னைத்தவிர மற்ற நபர்களை வரவழைத்தார். சாட்சி தற்போது சம்பவயிடத்திற்கு உதவி ஆய்வாளர் வந்தபிறகு தன்னை போன் செய்து அழைத்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார்.
6. நான் சம்பவயிடத்திற்கு போகும்போதே அனைத்து ஆவணங்களையும் உதவி ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்தார். நான் கையெழுத்து செய்தேன். நான்

சம்பவயிடத்திற்கு சென்றிருக்கும்போது எனது சகலை கோவிந்தசாமி காவல் நிலையத்தில் இருந்தார். நான் இந்த சம்பவம் தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. குமார் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார், என்னவென்று புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது.

7. நான் சொன்னவாறு சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்றாலும், எனது சகலைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்–12.00 PM

**1,4,5 எதிரிகள் தரப்பில் மேற்படி 2,3, 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை தனதென பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கபட்டது. மேற்படி கேள்விகளை தவிர கூடுதலாக கேள்விகள் கேட்கவும் அனுமதி வழங்கபட்டது.**

1. அ.சா.1 குமார் மற்றும் அ.சா.2 கோவிந்தசாமி எனது உறவினர் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களை தான் காவல் துறை விசாரணையிலும் சொன்னேன். இந்த சம்பவத்தை பற்றி எனக்கு போன்மூலமாக தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இரவு 9.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு போலீசார் என்னை விசாரிகக்வில்லை. அதற்கு முன்பாகவும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.
2. சம்பவம் நடந்த அன்றே இரவு 8.00 மணிக்கு போலீசார் வந்து வண்டியை பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்துவிட்டார்கள். நான் காவல் துறை விசாரணையில் மதியம் 1.00 மணிக்கு இந்த சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லவில்லை. மறுநாள் மதியம் 2.30 மணிக்கு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னை விசாரித்தாகவும் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை.
3. 1,4, மற்றும் 5 எதிரிகள் நான் சொன்னவாறு சம்பவத்து அன்று இரவு 8.00 மணிக்கு காவல் நிலையத்தில் இல்லை என்றாலும், அவர்களை மறுநாள் மதியம் 2.00 மணிக்குதான் போலீசார் கைது செய்தார்கள் என்றாலும், சரியல்ல. நான்

கேள்விபட்டவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ சமயத்தில் எதிரிகள் யாரையும் நான் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-01.39PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**